முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.28.01.2026

O.S No. 348/2015

வா.சா.1- கோபி

1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

வழக்கில் எத்தனை ஐட்ட சொத்துகள் சொல்லியுள்ளேன் என்றால் 3 சர்வே எண்ணில் எங்கள் சொத்துகள் அடங்கும். ஏ அட்டவணை, பி அட்டவணை என்று கொடுத்துள்ளேன். ஏ அட்டவணை சொத்து பாதையாகும். பி அட்டவணை சொத்து பிரதிவாதி ஆக்கிரமித்த சொத்து ஆகும். எனது வாதுரையில் ஏ சொத்து பொது பாதை என்று காண்பித்துள்ளேன் என்றால் சரிதான் ஆனால் அது எங்கள் தனிப்பட்ட பாதை ஆகும்.

ஏ அட்டவணை பாதை சொத்து கிழக்கில் இருந்து மேற்காக செல்லும் 4 அடி பொது பாதை என்றால் சரியல்ல. 4 அடி எங்களுக்கு தனிப்பட்ட வீதியாகும். எங்களுக்கு தனிப்பட்ட பாதை என்பதை காண்பிக்க ஆவணம் எதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏ பட்டிகை பாதை எங்கள் அப்பா விலைக்கு வாங்கிய பிறகு மட்டுமே எங்களுக்கு உரிமை என்றால் சரிதான். ஏ பட்டிகை பாதை எங்களுக்கும் எனது அப்பாவிற்கும் பூர்விக சொத்து இல்லை என்றால் சரி.

ஏ பட்டிகை பாதையில் புழங்கி வரும் உரிமை மட்டுமே உண்டு என்றால் சரி. எங்கள் அப்பாவின் விலையாவணத்தில் வாசாஆ 1-3 முதல் வரையிலான ஆவணங்களில் ஏ பட்டிகை பாதையை புழங்கிகொள்ள மட்டுமே உரிமை கொடுக்கப்பட்டது என்றால் சரி. வாசாஆ 2 ஆவணத்தில் வழக்கு ஏ பட்டிகை பாதை எல்கையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. வாதியின் பாதையாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரி. வாசாஆ 2-4 வரையிலான ஆவணங்களில் வழக்கு ஏ பட்டிகை சொத்து மீதான முழு உரிமை எங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல வழக்கு ஏ பட்டிகை பாதை

என்னுடையது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய முதல் விசாரணையில் ஏ பட்டிகை சொத்து பொது பாதையானாலும் என்னுடைய தனி பயன்பாட்டில் இருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. மேற்படி உரிமை எங்களுக்கு யாரால் தரப்படவில்லை என்றாலும் சரியல்ல. சொத்து வாங்கினாலே பாதி உரிமை உள்ளது. பிரதியின் பி பட்டிகை சொத்தில் 4 அடி பொது பாதை கிடையாது என்றால் சரிதான். பிரதியின் பி பட்டிகை சொத்துக்குள் வாசல் போடப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த வாசல் எங்களுக்கு இடையூறாக உள்ளது. பிரதியின் வாசல் ஏ பட்டிகை 4 அடி பொது பாதையில் போடப்படவில்லை என்றால் இல்லை. பிரதியின் இடத்திற்குள் போட்டுள்ளார்கள்.

1ம் பிரதியின் தாயார் மீனாட்சியும் எனது அப்பாவும் ஆவணஎண்921/1962 மற்றும் 922/1962 படி தான் ஒரே நாளில் ஒரே நபரிடம் இருந்து அவரது சொத்தை கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரி. பிரதியின் ஆவண எண் எனக்கு தெரியாது. 1962 ல் விலையாவணத்தின் படிதான் 4 அடி பொதுபாதை போடப்பட்டுள்ளது என்றால் சரி. 4 அடி முடுக்கை நோக்கி வாசல் வைக்க கூடாது என்று எந்த பத்திரத்திலும் தடை எதுவும் இல்லை என்றால் வாசாஆ 4 ல் சொல்லப்பட்டுள்ளது. வாசல் என்று கூறவில்லை பொதுவாக எந்த இடையூறும் செய்யக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. வாசாஆச 4 ல் 3 வது பக்கத்தில் 4 அடி பாதையில் எந்த மரங்களும் நட்டு இடையூறு செய்யக்கூடாது என்று உள்ளது.

வாசாஆ 4 ஆவணத்தில் 4 அடி வீதியில் அருகே உள்ள நிலத்தை விலைக்கு வாங்கிய நபர்களுக்கும் அந்த பாதையில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. அந்த 3 நபருக்கும் வேறு பாதைகள் உள்ளது. மேற்கே உள்ள பொதுப்பாதையில் கிரயம் வாங்கிய 50 நபருக்கும் உரிமை உள்ளது. பட்டிகை ஏ சொத்தில் மற்றவர்களுக்கு உரிமை இல்லை. என்னை தவிர வேறு யாரும் பிரதியின் வாசல் வைத்ததை தடை செய்யவோ , கேள்வி

கேட்கவோ இல்லை என்றால் சரியல்ல. சில நபர்கள் கேட்டார்கள் பிரதி கேட்காமல் தட்டி கழித்துள்ளார்கள். எனக்கு பாதிப்பு எற்பட்டுள்ளதால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4 அடி பாதையில் எந்த பகுதியில் இருந்தும் எந்த வீட்டு உரிமையாளரும் வாசல் அமைப்பதற்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் வசதி உரிமை அடிப்படையில் பாதையில் உரிமை கோரியுள்ளேன் என்றால் சரி. என்னுடைய ஆவணத்தின் படி நான் பாதையில் உரிமை கேட்கவில்லை என்றால் சரி. அந்த பொது பாதையை நான் உபயோகப்படுத்துவதை பிரதி தடை செய்யவில்லை என்றால் சரி. ஆனால் அவர் வைத்துள்ள மாவு மில் ஜன்னல் வழியாக எங்கள் வீட்டிற் குள் உள்ளது. இது சம்மந்தமாக நகராட்சியிலோ, மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தற்போது வழக்கிற்காக பிரதியின் மாவு மில் எனக்கு இடையூறு செய்வதாக மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தை ஆணையர் வந்து பார்வையிட்டு அறிக்கை, வரைபடம் , புகைப்படம் தாக்கல் செய்துள்ளார். ஆணையர் அறிக்கையில் ஏ பட்டிகை சொத்து பொது பாதை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. ஆணையர் அறிக்கையில் பிரதியின் பொதுப்பாதையில் பிரதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று 3, 4 பாய்ண்ட்டில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதியின் சன் செய்டுகளை பற்றி சொல்லியுள்ளார்.

பிரதியின் பி பட்டிகை சொத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு பல வருடங்களுக்கு முன்பிலிருந்து உள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் பிரதி ஏற்கனவே இருந்த கல்சுவர், மண்சுவர் அவற்றின் மேல் மறுசீரமைப்பு செய்து தற்போது உளள வீட்டை கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பில்லர் போட்டு வீடு கட்டியுள்ளார் . வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றாலும் உண்மையை மறைத்து இந்த வழக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதியின் அம்மா விலை வாங்கிய பத்திரத்தில் வழக்கு ஏ பட்டிகை சொத்தை பொது பாதை என்று விவரிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

10.02.1980 ல் தான் நடராஜனுக்கும், 1 ம் பிரதிக்கும் அவரது சகோதரருக்கும் இடையே பாக பிரிவினை எற்பட்டதில் 1 ம் பிரதிக்கு வழக்கு ஏ பட்டிகை பொது பாதை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்மந்தமே இல்லை. அந்த பாக பிரிவினை ஆவணத்தில் கிடைத்த சொத்தை நடராஜ பிள்ளை 23.09.1992 ல் ஏ பட்டிகை பாதையை குறிப்பிடாமல் ரவி மற்றும் விமலா விலைக்கு கிரயம் கொடுத்ததுள்ளார் எனறால் எனக்கு தெரியாது. அதன் பின் தான் ரவி மற்றும் விமலா ஏ பட்டிகை பாதையை குறிப்பிடாமல் எனது அப்பாவிற்கு சொத்தை கைமாற்றம் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் வழக்கு ஏ பட்டிகை சொத்து பொது பாதைதான் என்றாலும் வழக்கிற்காக உண்மை விவரங்களை மறைத்து தெரியாது என்றாலும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யததக்கது என்றாலும் சரியல்ல.